# விதை அடிக்கப்பட்ட அரசியல்வாதிகளும் கட்டியம் கூறும் ஊடகங்களும்

## NS NADESAN

சோவியத் ரஷ்சியாவில் கம்யூனிச ஆட்சிக்காலத்தில் இரண்டு பிரதான செய்திப்பத்திரிகைகள் இருந்தன. பிராவ்டா (ரஷ்சிய மொழியில் உண்மை) மற்றயது இஸ்வெஸ்தியா (ரஷ்சிய மொழியில் செய்தி), பிராவ்டா சோவியத் கமியூனிஸ்ட் கட்சியாலும் இஸ்வெஸ்தியா, சோவியத் அரசாங்கத்தாலும் நடத்தப்பட்டது.

இந்த இரு பத்திரிகைகளைப்பற்றியும் ரஸ்சியர்கள் கூறும்போது பிராவ்டாவில், இஸ்வெஸ்தியா இல்லை. இஸ்வெஸ்தியாவில் பிராவ்டா இல்லை என்பார்கள். (உண்மையில் செய்தி இல்லை செய்தியில் உண்மை இல்லை.)

இலங்கை தமிழ் ஊடகங்களும் இந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றன போல் தெரிகிறது.

சமீபத்தில் யாழ்ப்பாண மீனவர்கள் விடயத்தில் உதயன் என்ற யாழ்ப்பாண பத்திரிகையை மூன்று நாட்கள் வாசித்துவந்த போது எனக்கு ஏற்பட்ட அவதானிப்பு சரியானதா? என நானே இங்கு யாழ்ப்பாண உதயனை பிரஸ்தாபிப்பதற்கான இந்தப் பத்திரிகையை வாசித்துவிட்டுத்தான் அவுஸ்திரேலிய தமிழ் வானொலிகள் ஈயடிச்சான் கொப்பி போல் வாசிக்கும் செய்திகள் எங்கள் புலம்பெயர்ந்த தமிழ் அவுஸ்திரேலியர்களை அடைகிறது. இதே போல் புதினம் எனும் இணையத்தை அப்படியே கனடிய மற்றும் ஐரோப்பிய வானொலிகள் வாசிக்கின்றன என அறிந்துள்ளேன். இந்த இரு ஊடகங்களையும் படித்துவிட்டு அரசியல் மேதைகளாவோர் பலர் எம்மத்தியில் உள்ளனர்.

### வெடியோசையால் பரபரப்புப் பீதி

யாழ்நகரின் கரையோரப்பகுதியில் நேற் றிரவு 9.15மணியளவில் திடீரெனக் கிளம்பிய வெடிச்சத்தங்கள் கேட்டதையடுத்து பொதுமக்கள் பீதியடைந்தனர். யுத்த அச்சம் காரணமாகச் சில குடும்பங்கள் இடம்பெயரவும் தயாராகின என்று கூறப்படுகிறது.

ஆனாலும் தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற வாணவேடிக்கையால் எழுந்த வெடிச்சத்தமே அது என்று தெரிய வந்தபின் அவர்கள் நிம்மதியடைந்தனர். 31.9.04 - உதயன் **(யாழ்ப்பாண தினசரி)**

### ட்றோலர் படகு சுடப்பட்ட சம்பவம்
### குருநகர்ப் பகுதி மீனவர்கள் நேற்றுத் தொழில் பகிஷ்கரிப்பு

குருநகர்ப் பகுதி மீனவர்கள் நேற்று கடற்றொழிலுக்குச் செல்லாமல் பகிஸ்ஷ்கரிப்பில் ஈடுபட்டனர். குருநகர் சென்.ஜேம்ஸ் வீதியில் அமைந்துள்ள குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் முன்பாக நேற்றுக்காலை 10 மணி முதல் ஒன்று கூடிய மீனவர்கள் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்த நிலையில் காணப்பட்டனர். குருநகர் மீனவர்களுக்குச் சொந்தமான ட்றோலர் படகுகளை நோக்கி நேற்றுமுன்தினம் கடலில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிப் பிர யோகச் சம்பவத்துக்குக் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்தே மீனவர்கள் நேற்றுப் பகிஸ்ஷ்கரிப்பில் ஈடுபட்டனர். காலையில் ஒன்றுகூடி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்த மீனவர்கள் பின்னர் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசப் பணிமனையையும் தாக்கிச் சேதப்படுத்தினர். அந்தப் பணிமனை வளவில் அமைந்திருந்த வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனப் பெயர்ப்பலகையையும் அடித்து நொறுக்கினர். இதன் காரணமாக அந்த அலுவலகம் உடனடியாக இழுத்து மூடப்பட்டது. யாழ். சின்னக்கடைப் பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் என்பனவும் மூடப்பட்டன.

நேற்றுமுன்தினம் கடலில் நடத்தப்பட்ட தாக்குதலில் குருநகர் மீனவர்களின் ட்றோலர் படகு ஒன்று பலத்த சேதமடைந்தது. அதில் இருந்த இரண்டு மீனவர்கள் காயமடைந்தனர். குடாக்கடலில் ட்றோலர் படகுகளில் மீன் பிடிப்பது தொடர்பாக குருநகர் மற்றும் பூநகரி – பாலாவி பிரதேச மீனவர்களிடையே இணக்கப் பாடு ஒன்று கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்று கூறப்படுகிறது. இந்த இணக்கப்பாட்டின் பிரகாரம் பாலாவி கடற்கரையில் இருந்து ஐந்துமைல் தொலைவுக்குள் குருநகர் மீனவர்கள் ட்றோலர் படகுகளில் வந்து தொழில் செய்வது கட்டுப்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

கடலில் இடம்பெற்ற சம்பவத்துக்கும் இந்த இணக்கப்பாட்டுக்கும் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து உடனடியாகத் தகவல் எதுவும் தெரியவரவில்லை. இருபகுதி மீனவர்களிடையேயும் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுவதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.
1.09.04 - **உதயன் (யாழ்ப்பாண தினசரி)**

### மீனவர் பிரச்சனை வலுக்கிறது

குருநகர் மீனவர்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து பிரச்சனை தற்போது வலுத்துள்ளது. இப்பிரச்சனை தொடர்பாக தமிழ் ஊடகங்கள் நடந்து கொள்ளும் முறை மீனவர்களை விசன மடையச் செய்துள்ளது. நேற்றைய இரவு பீபிசி செய்தியில் பிபிசியின் வவுனியாச் செய்தியாளர் மாணிக்கவாசகர் வழங்கிய செய்திக்குறிப்பில் யாழ் மன்னார் பாலாவி மீனவர்களுக்கிடையே நடந்த பிரச்சனையில் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டிருந்தது. இன்றைய உதயனும் அதே பாணியில் செய்தி வெளியிட்டிருந்தது. இன்று உதயன் காரியாலயத்தினுள் புகுந்த மீனவர்கள் ஏன் பொய்யை எழுதுகிறீர்கள் . யாரும் கடதாசி விளையாடினால் எழுதுவீர்கள். வேறு எதையெல்லாமோ எழுதுவீர்கள் இதில் ஏன் உண்மை விளம்பவில்லை என்று அங்கிருந்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஊழியர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார்கள். இதற்கிடையே மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீனவர் சங்கத்தலைவர்களை யாழ் ஆயரின் தலையீட்டை அடுத்து மீனவர்கள் விடுதலை செய்துள்ளதாக அறியப்படுகிறது. (2.09.04 - உதயன் (யாழ்ப்பாண தினசரி))

## றோலரைத் தாக்கியோரை இனங்காட்டுமாறு கோரி குருநகர் மீனவர்கள் உதயன் பணிமனை முன் ஆர்ப்பாட்டம்

நேற்றைய உதயனில் வெளியான மீன்பிடி ட்றோலர் படகு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான செய்தியில் – சரியான தகவல்கள் சேர்க்கப்படவில்லை என்று தெரிவித்து, குருநகர் மீனவர்கள், நேற்றுக் காலை 'உதயன்' பணிமனை முன்பாகத் திரண்டு கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். பூநகரி – பாலாவி கடற்பகுதியில் கடந்த திங்கட்கிழமை குருநகர் மீனவர்களின் ட்றோலர் படகு ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்தப் படகு சேதமடைந்தது. அதிலிருந்த மீனவர்களில் இருவர் காயங்களுக்கு ஆளாகினர். இச்சம்பவம் பற்றிய செய்தியில் படகுமீது தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்று செய்தி யில் குறிப்பிடப்படவில்லை. அந்த விவரத்தைத் தெரிவித்துச் செய்தி வெளியிட வேண்டும் என்று கோரியே அவர்கள் 'உதயன்' பணிமனை முன் திரண்டு வந்து கோஷமிட்டனர்.

விடுதலைப் புலிகளினாலேயே அந்தப் படகு மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது என்று அவர்கள் பலத்த குரலில் குற்றஞ்சாட் டினர். தமது குற்றச்சாட்டை உதயனில் வெளியிட வேண்டும் எனவும் அவர்கள் கோரினர். தாம் குருநகர் மக்கள் சார்பில் உண்மை யைத் தெரிவிக்க விரும்புவதாக பல நிமிட நேர மாகக் கோஷமிட்டதுடன், களேபரமும் செய்தனர். உங்கள் நிலைப்பாட்டைத் தெரிவித்து எழுத்து மூலம் அறிக்கை ஒன்றைத் தாருங்கள் என்று 'உதயன்' தரப்பில் கேட்டோம். தாம் எந்தச் சங் கத்தின் சார்பிலும் வரவில்லை என்றும் மக்கள் சார்பில் வந்திருப்பதாகவும் அவர்கள் மீண்டும் மீண்டும் விலியுறுத்தித் தெரிவித்தனர். 'உதயன்' அலுவலர்களுக்கும் திரண்டு வந்த மக்கள் தரப்பினரில் ஒரு சிலருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர், அவர்களில் ஒருவர் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தார். அவர் கூறியதாவது:–

கடந்த திங்கட்கிழமை காலையில் தொழில் புரியச் சென்ற ட்றோலர் படகின் மீது விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் நடத்திய துப்பாக் கிச் சூட்டினால் ஒருவரின் காலில் காயம் ஏற்பட் டது. ட்றோடர் எரிந்த சம்பவத்தில் காயமுற்ற வரை அவர்கள் ஏற்றிக் கரைக்குக் கொண்டு வந் திருந்தமை எங்களுக்குச் சரியான கவலையைத் தந்துள்ளது. எங்கள் மக்கள் அன்றாடம் தொழில் செய்யும் இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது எங்களுக்கு மிகப்பெரும் கவலையாக உள்ளது.

எங்கள் கடலில் நாங்கள் தொழில் செய்ய முடியாத நிலைமை வந்திருக்கிறது. இனிமேல் அந்நியரின் கடற்பரப்பிலும் தங்கமுடியாத நிலைமை வந்துள்ளது. ட்றோலர் படகின் டீசல் ராங்கில் சூடுபட்டே படகு பற்றி எரிந்தது. நான்கு லட்சம் ரூபா பெறுமதியான படகு நாசமாகிவிட்டது. ட்றோலரில் சென்று காயமுற்றவர்கள் க.அமன், ஜோசப் சேகர், ஏ.சி.பாவு, சுதா ஆகியோராவர் – என்று அவர் உதயனுக்குத் தெரிவித்தார். **உதயன் (யாழ்ப்பாண தினசரி))**

## குருநகரில் இரண்டாவது நாளாகவும் மீனவர்கள் தொழில் பகிஷ்கரிப்பு

குடாக்கடலில் கடந்த திங்களன்று மீன்பிடி ட்றோலர் படகு தாக்கப்பட்ட சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து குருநகர்ப் பகுதி மீனவர்கள் நேற்று இரண்டாவது நாளாக தொழில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். மீன்பிடி மற்றும் மீன் விற்பனை நடவடிக்கைகள் தடைப்பட்டதால் குருநகர்ப் பகுதியில் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது. குருநகர் சின்னக்கடைப் பொதுச்சந்தை மற் றும் இறைச்சிக் கடைகள் நேற்று இரண்டாவது நாளாகவும் திறக்கப்படவில்லை. இதேநேரம் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள வடமா காண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்க ளின் சமாசக் காரியாலயமும் நேற்று இயங்கவில்லை.

சின்னக்கடை – இறைச்சிக்கடைகள் பூட்டப் பட்டிருந்த போதிலும் இறைச்சி வியாபாரிகள் இறைச்சிக் கடைகளின் எதிர்ப்புறமாக வைத்து இறைச்சி வியாபாரத்தை மேற்கொண்டிருந்தார்கள். **உதயன் (யாழ்ப்பாண தினசரி))**

## *(மேலதிக இணைப்பு)* இரு பகுதி மீனவர்களுக்கு இடையே நடந்த பிணக்கை விபரீதமாக்க முயற்சி

**யாழிலிருந்து எழின்மதி வெள்ளிக்கிழமை, 03 செப்ரெம்பர் 2004,**

கடந்த திங்கட்கிழமை (30.08.04) இழுவை மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் கரையோர சிறுதொழில் செய்பவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு ஒன்றின் விளைவான சம்பவத்தைப் பயன்படுத்தி யாழ். குருநகர் மீன்பிடித் தொழிலாளர்களின் பேரில் தேசத்துரோக சக்திகள் மிக மோசமான பரப்புரையை மேற்கொண்டு மக்களைக் குழப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பூநகரி பாலாவி கிராமக் கடற்பகுதியில் குருநகரில் இருந்து வந்த இழுவை மீன்பிடிப்படகு ஒன்று நடைமுறைகளை மீறி கரையோரத்தில் இழுவைத்தொழில் செய்ய முற்பட்டபோது கரையோர சிறுதொழில் மீனவர்களுக்கும் இழுவைப்படகில் வந்தவர்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

இதனையடுத்து போராளிகளிடம் பாலாவி மீனவர்கள் முறையிட்டனர். அதன் பின் கடற்புலிப் போராளி ஒருவரை அழைத்தவாறு அத்துமீறலில் ஈடுபட்ட இழுவைப்படகை நோக்கி படகில் மீனவர்கள் சென்றனர்.

அவ்வேளை இழுவைப்படகினை நிறுத்தக் கேட்கப்பட்ட போது அவர் படகினை நிறுத்த மறுத்துச் சென்றார். இதன் போது படகை நிறுத்த எச்சரிக்கைக்காக போராளி வேட்டைத் தீர்த்த வேளை தவறுதலாக இழுவைப்படகு மீன்பிடித் தொழிலாளி ஒருவரின் காலைத் தாக்கியது. அத்துடன் படகின் டீசல் கொள்கலனில் ரவை பட்டு அது தீப்பிடித்தது.

உடனடியாக பாலாவி மீனவர்கள் தீயை அணைத்து காயம் அடைந்தவரைக் காப்பாற்றினர். இதில் காயம் அடைந்தவர் நடந்த சம்பவத்தின் உண்மைத்தன்மையினையும் தம்தரப்புத் தவறையும் ஒப்புக்கொண்டார்.

ஆனால் இதனைப் பயன்படுத்தி குருநகர் மக்களிடையே தேசவிரோத சக்திகளும், சிறிலங்காப் படைப் புலனாய்வு சக்திகளும் தமிழீழ விடுதலைப் புலிகளையும், மக்களையும் பிளவு படுத்தும் நோக்குடன் கொந்தளிப்பை ஏற்படுத்த முயன்றுள்ளனர்.

குருநகர் மக்களின் பெயரில் தேசவிரோத சக்திகள் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன. இதனை அடுத்து நிலைமைகளை தெளிவு படுத்தும் வகையில் குருநகர் இழுவை மீன்பிடித் தொழிலாளர்கள் சங்கப்பிரதிநிதிகள், பூநகரி மீன்பிடித்

தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன், பளையில் நேற்று கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இதில் நடந்த சம்பவம் பற்றி குருநகர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டது. இச்சம்பவம் ஆழ்ந்த கவலை அளிக்கும் சம்பவம் என்றும், இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு இனிமேல் வாய்ப்பளிக்கக் கூடாது என்றும் கேணல் சூசை அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இதனைப் பயன்படுத்தி தேசவிரோத சக்திகள் குழப்பங்களை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே பிளவை உண்டாக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது எனவும் அவர் வேண்டினார்.

தொழில் ரீதியான பிணக்குகளின் விளைவே இது எனவும் இப்பிணக்குக்கு காரணமான இழுவை மீன்பிடி இவ்வாண்டுடன் முற்றாக நிறுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அது வரையான மூன்று மாதங்களுக்கு மீன்பிடித் தொழிலாளர்களிடையே பிணக்குகள் ஏற்படாது ஒற்றுமையைப் பேண இரு தரப்பு மீனவர்களும் இழுவை மீன்பிடித் தொழிலாளர்கள் வாரத்தில் வியாழன், சனி ஆகிய இரு நாள்களில் மீன் பிடிக்க அதற்குரிய கடல் எல்லையை வரையறை செய்தனர்.

இரு தரப்பு மீனவர்களும் தெளிவடைந்து சென்றனர். இக்கலந்துரையாடலில் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். **புலிகளின் ஆதரவு புதினம் இணையம்**

## பொய்யைச் சொல்லும்போதும் பொருந்தச் சொல்ல வேண்டுமல்லவா.

மீனவர்களது படகை நிறுத்தச் சொல்லி கடற்புலிகள் கேட்டார்களாம். மீனவர்களது இழுவைப் படகின் யந்திரத்தின் வலு 15 குதிரைவலுவாகும். அதிலும்கூடிய படகுகளை கடற்படை அனுமதிப்பதில்லை. அதனோடு அது பாரமேற்றப்பட்ட படகு. கடற்புலிகளின் படகோ 100 குதிரை வலுவுக்கு மேலான இரட்டை அல்லது மூன்று யந்திரங்கள் பூட்டப் பட்டது. சில செக்கன்களில் நீரைக் கிழித்துக்கொண்டு போக வல்லது. மீனவர்களைச் சுட்டு நிறுத்த வேண்டிய அவசியமில்லை.

அடுத்தது இரண்டு மீனவக்குழுக்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்க்க சுடுவதா வழி. அவர்கள் என்ன அபின்கடத்தியா வந்தார்கள் சுடுவதற்கு. இந்தச் சின்னப் பிரச்சினையையே தீர்க்க முடியாத புலிகள் தன்னிடம் ஆட்சியதிகாரத்தைத் தரும்படி அடம்பிடிக்கிறார்கள **புலிகளை விமர்சிக்கும் தேனி இணையத்தளம்**

## மீனவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக முறைப்பாடு

இலங்கையின் வடக்கே யாழ் நகருக்குத் தென்கிழக்கே கல்முனைப் பகுதியில் மீனவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் சார்பில் பேசவல்ல அதிகாரியான ஜோன் ஒஸ்கார் கூறியுள்ளார்.

மீனவர்களின் முறைப்பாட்டின்படி புலிகள் அமைப்பு உறுப்பினர் ஒருவர் படகில் இருந்த மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அதில் ஒருவர் காயமடைந்ததாகவும் ஒஸ்கார் கூறினார்.

இந்த தாக்குதலில் எரிந்துபோனதாக கூறப்படும் படகை தாம் சென்று பார்த்ததாகவும் அவர் கூறினார்.

இந்த முறைப்பாடு குறித்து தாம் விசாரணை செய்து வருவதாகவும் இது தொடர்பாக புலிகளுடன் நாளை பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். **பிபிசியின் தமிழ் ஓசை**

இதே வேளையில் கொழும்பில் இருந்து வரும் தினக்குரல், புதினத்தின் செய்தியை அப்படியே தனது செய்தியாக போட்டுள்ளது. இதில் தினக்குரலின் தலைப்பு வேடிக்கையானது மட்டுமல்ல விசமத்தனமானது.

### "குருநகர் - பூநகரி மீனவர்களுக்கிடையே பிரச்சினை கடற்புலிகளின் தலையீட்டையடுத்து சுமுகமான தீர்வு."

குற்றவாளிகளை நீதிபதியாக்கி பாதிக்கப்பட்டவர்களை வன்முறையாளர்களாக்கிய இந்த தலையங்கம் பத்திரிகை துறையில் பரவியுள்ள எயிட்ஸ்நோயின் குணக்குறியாகும்.

வீரகேசரி வாசிப்பதை நிறுத்திவிட்டேன். இறந்தவர்களின் நன்றிநவிலல் உடன் நின்று தனது வீரியத்தை இழந்துவிட்டது இந்த பழம் பெரும் பத்திரிகை.

காலம் காலமாக சிங்கள, ஆங்கில ஊடகங்களை இனவாதிகள் என திட்டித் தீர்த்த தமிழர்கள் இப்பொழுது அவர்களின் ஊடகங்களை வாசித்து உண்மை அறியும் காலம் வந்துவிட்டது.

விதை அடிக்கப்பட்ட அரசியல்வாதிகளும் கட்டியம் கூறும் ஊடகங்களும் ஈழத்தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிக்கின்றன.